**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 359/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 18.11.2025.**

| | |
|---|---|
| **Name : மகுடேஸ்வரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வீரக்கல்லில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்கிறேன். என் நண்பர் சுரேந்தரன் ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்பதால் பழக்கம். என் தந்தையை பார்ப்பதற்காக நானும் என் நண்பர் சுரேந்தர் என்பவரும் கடந்த 6 மாதத்திற்கு முன்பாக மதியம் 12 மணியிலிருந்து 1 மணிக்குள் எங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு R15 Yamaha இரு சக்கர வாகனத்தில் சுரேந்தர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து பயணம் செய்தோம்.

2) இருவரும் வீரக்கலில் இருந்து கருமலைக்கூடல் நோக்கி தோட்டம் அருகில் உள்ள பகுதியில் வந்த போது வீரக்கல் நோக்கி வந்த ஆம்னி கார் 5548 வளைவில் வேகமாக ஒட்டி வந்த போது எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக எனக்கு இடது கால் முட்டிக்கு கீழ் காயம் ஏற்பட்டது. சுரேந்தர் என்பவருக்கு தலை, நெஞ்சு, கால் ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு காயம் அடைந்த இருவரையும் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

3) காயம் பட்ட சுரேந்தர் என்பவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். சேலம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே சுரேந்தர் இறந்துவிட்டார். இந்த

விபத்திற்கு யார் ஓட்டுநர் தான் காரணம் ஆவார். கார் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. காரணம் விபத்திற்கு பிறகு நான் சுயநினைவை இழந்துவிட்டேன். ஆம்புலன்ஸ் வரும் போது தான சுயநினைவு வந்தது. காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

4) இந்த விபத்திற்கு தனிப்பட்ட முறையில் நான் காரணம் இல்லை என்றால் ஆமாம். பின்னால் அமர்ந்து வந்ததால் நான் வாகனத்தை ஓட்டவில்லை என்றால் ஆமாம். விபத்து நடந்தது வளைவான பகுதி என்றால் ஆமாம். நான் வீரக்கல்லில் இருந்து கருமலைக்கூடல் நோக்கி வந்தோம் என்றால் ஆமாம். கருமலைக்கூடல் சற்று பள்ளமான பகுதி என்றால் ஆமாம். விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனம் பள்ளத்திலிருந்து மேடு நோக்கி வந்தது என்றால் ஆமாம்.

5) நான் ஓட்டி வந்த யமாஹா இரு சக்கர வாகனம் அதிக செயல்திறன் கொண்டது என்றால் ஆமாம். விபத்து நடந்த போது நான் மதுபோதையில் இருந்தேனா என்றால் இல்லை. சுரேந்தர் மதுபோதையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுரேந்தர் மது போதையில் இருந்ததாக மருத்துவமனையில் சொன்னார்கள். அப்போது தான் தெரிந்து கொண்டேன்.

6) விபத்து நடப்பதற்கு முன்னரே சுரேந்தர் மது போதையில் இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. இந்த விபத்தில் எனக்கு பெரிய காயம் ஏற்படவில்லை என்றால் முட்டியில் மட்டும் காயம் ஏற்பட்டது. சுரேந்தர் மதுபோதையில் இருந்த விவரம் தெரியும் என்றும் தெரிந்து கொண்டு நான் வாகனத்தில் இருந்து குதித்துவிட்டேன் என்றும் சுரேந்தர் நிலைதடுமாறி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

7) சுரேந்தரை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு யார் எந்த வாகனத்தில் அழைத்து சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நாங்கள் இருவரும் ஒரே ஆம்புலன்சில் தான் சென்றோம். சுரேந்தர் சம்பவயிடத்தில் இறக்கவில்லை என்றும் சிகிச்சை பலனின்றி தான் இறந்தார் என்றால் சேலம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்தார்.

8) நான் இரு சக்கர வாகனத்தில் இருந்து குதித்ததால் தான் நான்கு சக்கர வாகனத்தை ஓட்டிய நபரை நான் பார்க்க முடியவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக இரு சக்கர வாகனத்தில் சென்ற இரு நபர்களுக்கும் விபத்து ஏற்பட்டால் இருவருக்கும் தான் அடி அதிகமாக ஏற்படும் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படும் என்ற அதிர்ச்சியில் நான் குதித்து தப்பித்துக் கொண்டேன் என்றால் சரியல்ல.

9) நானும் மதுபோதையில் இருந்ததால் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று திரும்பினேன் என்றால் சரியல்ல. பொதுவாக மதுபோதையில் உள்ள நபர்களை மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்க மாட்டார்கள் என்றால் அவ்வாறு இல்லை. விபத்து எங்கள் இருவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. என்னுடன் திரும்பி பார்த்து சுரேந்தர் திரும்பி பார்த்து பேசிக் கொண்டே வந்ததாலும், பொதுவாக பள்ளத்திலிருந்து மேடு நோக்கி வரும் போது எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் மோதி நாங்களாகவே விபத்தை தேடிக் கொண்டோம் என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. முழுக்க முழுக்க எங்களால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. சுரேந்தர் குடும்பத்தை சேர்ந்த நால்வரும் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளனர் என்றால் ஆமாம். அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் சுரேந்தர் மதுபோதையில் இருந்தது என்றால் அவ்வாறு இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 359/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 18.11.2025.**

| | |
|---|---|
| **Name : மணிகண்டன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வீரக்கல்லில் குடியிருந்து பால் கம்பெனியில் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் மைத்துனர் சுரேந்தரன் ஆவார். அ.சா.1ன் தந்தையை பார்ப்பதற்காக அ.சா.1ம் சுரேந்தர் என்பவரும் கடந்த 18.05.2025 ம் தேதியன்று மதியம் 12 மணியிலிருந்து 1 மணிக்குள் எங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு R15 Yamaha இரு சக்கர வாகனத்தில் சுரேந்தர் ஓட்ட அ.சா.1க்கு பின்னால் அமர்ந்து பயணம் செய்தார்கள்.

2) இருவரும் கோம்புரான்காட்டிற்கு கீழே சாம்பள்ளி நோக்கி சென்ற போது வீரக்கல் நோக்கி வந்த ஆம்னி கார் அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக அ.சா.1க்கு இடது கால் முட்டிக்கு கீழ் காயம் ஏற்பட்டது. சுரேந்தர் என்பவருக்கு தலை, நெஞ்சு, கால் ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு காயம் அடைந்த இருவரையும் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

3) காயம் பட்ட சுரேந்தர் என்பவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். சேலம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே சுரேந்தர் இறந்துவிட்டார்.

கடந்த 19.05.2025ம் தேதி காலை 6 மணிக்கு கருமலைக்கூடல் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு என்முன்பாகவும் மணிவேல் முன்பாகவும் சாட்சியாக வைத்து விபத்து நடந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். முதலில் நான் கையொப்பம் செய்தேன். பிறகு மணிவேல் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் 1ம் கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் தெரியும். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் பார்வை மகஜர் தயார் செய்த போது வாகனம் இருந்ததா என்றால் இல்லை. சுரேந்தர் என் உறவினர் என்றால் ஆமாம். இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

5) சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் இறந்தவர் என் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லாமல் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் பார்வை மகஜரை படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

6) சம்பவயிடம் வளைவான பகுதி என்றால் ஆமாம். மேட்டிலிருந்து பள்ளம் நோக்கி செல்லும் சாலை என்றால் ஆமாம். பொதுவாக மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி வரும் வாகனம் தான் வேகமாக வரும் என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. யார் வேகமாக சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 359/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 18.11.2025.**

| | |
|---|---|
| **Name : மணிவேல்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் நங்கவள்ளியில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் பெரியம்மா மகன் சுரேந்தரன் ஆவார். அ.சா.1 ன் தந்தையை பார்ப்பதற்காக அ.சா.1 ம் சுரேந்தர் என்பவரும் கடந்த 18.05.2025 ம் தேதியன்று மதியம் 12 மணி சுமாருக்கு எங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு R15 Yamaha இரு சக்கர வாகனத்தில் சுரேந்தர் ஓட்ட அ.சா.1 க்கு பின்னால் அமர்ந்து பயணம் செய்தார்கள்.

2) இருவரும் கோம்புரான்காட்டிற்கு கீழே சாம்பள்ளி நோக்கி சென்ற போது வீரக்கல் நோக்கி வந்த ஆம்னி கார் அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக அ.சா.1 க்கு கால் முட்டிக்கு கீழ் காயம் ஏற்பட்டது. சுரேந்தர் என்பவருக்கு நெஞ்சு, கால் ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு காயம் அடைந்த இருவரையும் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

3) காயம் பட்ட சுரேந்தர் என்பவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். சேலம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே சுரேந்தர் இறந்துவிட்டார். கடந்த 19.05.2025 ம் தேதி காலை 6 மணிக்கு கருமலைக்கூடல் போலீசார்

சம்பவயிடத்தை பார்வையிட்டு என்முன்பாகவும் மணிகண்டன் முன்பாகவும் சாட்சியாக வைத்து விபத்து நடந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் 2ம் கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் நான் ½ மணி நேரத்தில் சம்பவயிடம் சென்றுவிட்டேன். சம்பவயிடத்தில் நான் செல்லும் போது விபத்தில் காயமடைந்தவர்கள் அங்கிருந்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்காததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். சம்பவயிம் மேடு, பள்ளமான இடம் என்றால் ஆமாம்.

5) இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி வந்தார்கள் என்றால் ஆமாம். நான்கு சக்கர வாகன ஓட்டுநர் பள்ளத்திலிருந்து மேடு நோக்கி வந்தார் என்றால் ஆமாம். பொதுவாக மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி வரும் வேகமாக வரும் என்றும் அந்த வேகத்தாலும், அவர் மதுபோதையில் இருந்ததால் வாகனம் கட்டுப்பாடில்லாமல் ஆம்னி மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

6. காவல் நிலையத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். இறந்த சுரேந்தர் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இறந்தவர் என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**